I 8368
MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41.

தமிழர் நேசன்

ஐந்தாவது (1921-1922) தொகுதியின்

பொருள் அடக்கம்

Dr. U. V. S. IYER LIBRARY ★ MADRAS ★
ACC. NO. 8368
R011-111
112 1227

விஷயம்	பக்கம்
1. முன்னுரை:—கனம் தி. சதாசிவ ஐயர் B.A., M.L.	1
2. விசேஷ நிருபங்கள்:—ராஷ்டேல் நியாயஸ்த[illegible]தரிசிகளின் சரித்திரம்:—ஸ்ரீமான். K. S. பாட்டராசாரியார் M. A.	178
,, திருஞானசம்பந்தர் தேவாகரம், இயற்போருளழகு:—ஸ்ரீமான் K. சுப்பிரமணியம் M.A., M.L.	317
3. பௌதிக சாஸ்திரம்:—(படங்களுடன்)	
ஒலி நூல்:—ஸ்ரீமான் K. P. யஜ்ஞேசுவரசர்மா M.A., L.T.	50, 161, 225
மழை:—ஸ்ரீமான் கலியாணசுந்தரம் ஐயர் B.A. (Hons)	85
4. சிற்ப சாஸ்திரம்:—(படங்களுடன்)	
பாலங்கள்-ஸ்ரீமான் K. சுப்பிரமணிய ஐயர்	79, 260,
5. உயிர்நூல்:—(படங்களுடன்)	
தேளின் மணம்:—ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி ஐயர் B.A., B.L.	100
மனித இனத்தின் பெரும்பசை:— ஷை	269
விஷமற்ற பாம்பே இல்லை:— ஷை	289
தத்துக்கிளிகள்:—ஸ்ரீமான் M. ஏகாம்பரநாதன் M.A., L.T.	293
குளத்தில் வாழ்வன:-ஸ்ரீமான் R. கோபாலஐயர் M.A., L.T.	217
குளக்கரை அரக்கன்:— ஷை	299
6. தாவர நூல்:—(படங்களுடன்)	
நாய்க் குடையினம்:—ஸ்ரீமான் M. S. ஸபேச ஐயர் M.A.	193
பாசியினம்:— ஷை	321
பாசவினம்:— ஷை	353
7. வைத்திய சாஸ்திரம்:—	
மூலிகைகளின் பிரதான திரவியம்:—ஸ்ரீமான்கள் வைத்திய விசாரத. K. G. நடேச சாஸ்திரியார், எலியூர்க்கர் சுப்பிரமணிய சர்மா	17, 33
நோவின்போருள்:-ஸ்ரீமான் P.N. அப்புஸ்வாமிஐயர் B.A., B.L.	65
மஞ்சள் சுரம்:— ஷை	129
வாயு:—(மொழிபெயர்ப்பு)	201
கிளர்ச்சிப்போருள் கேட்டவமக்கம்:— ஷை	220

விஷயம். பக்கம்.
கனவு காண்பது ஏன்:-ஸ்ரீமான் V. நாராயணஐயர் M.A., M.L. 377
8. சோதிட சாஸ்திரம்:—
ஜனனக் குறிப்பு:—ஸ்ரீமான் S. K. பார்த்தசாரதி B.A., B.L. 4
மணப்பொருத்தம்.— ஷை 74
ஜாதக்ஸ்புடம்.— ஷை 135
9. சட்டநூல்:—
நமது நியாயஸ்தலங்கள்:—ஸ்ரீமான் N. ராஜகோபாலாசாரியார் B.A., B.L. 30, 154, 174
10. ஜீவசரிதைகள்:—
பெஞ்ஜமின் ப்ராங்க்லின்:—ஸ்ரீமான் T. R. ராஜகோபால ஐயர் 94, 112
11. தமிழ்ச் செல்வம்:—அ.மா:— 60, 220, 284
12. கவிகள்:—
தேவை:—ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராமஐயர் 3
கூட்டுறவு இயக்கத்தின் குணம்:— ஷை 111
புதியகவிகள்:— 146, 187, 280
மரணபயம்.—அ.மா. 223
ஒளிர்விண் மீனே:—அ.மா. 247
13. கதைகள்:—
தில்லைக் கோவிந்தன் — 53, 166, 248, 337, 368
கிரேக்க நாட்டுக் கதைகள்:— 211, 236, 272, 382
பெண்டாட்டியை நம்பாத பேயன்:— 303.
பிடிப்பிடீஸ்:— 105
14. பொது விஷயங்கள்:—
மந்திரவாதிகளின் மாயவித்தைகள்:—ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி B.A., B.L. 23, 43, 363
சதுரங்க ஆட்ட வல்லமை மிக்கோன்:— அ. 63
தாய் மொழி வளர்த்தல் (மொழி பெயர்ப்பு):—ஸ்ரீமான் V. P. சுப்பிரமணிய முதலியார் 97
தமிழரின் கடன்பாடு (காலஞ் சென்ற) ப்ரொபஸர் P. சுந்தரம் பிள்ளை 257
இராமாயண விமர்சனம் (மொழி பெயர்ப்பு) 332
கூட்டுறவு மளிகை:ஸ்ரீமான்பண்டிதர்ஊ.சா வேங்கடராம ஐயர் 373
15. குறிப்புக்கள் 127, 188, 253, 350
16. அறிவு நூல் மொழிகள்:—32, 64, 96, 128, 191, 224, 256, 287, 320
17. மதிப்புரை:— 147, 192, 316

தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்

தொகுதி V. } துர்மதி௵ சித்திரைமீ { பகுதி 1.

முன்னுரை.

Foreword

தற்காலத்தில் தமிழ் நாடெங்கும் புதியதொரு உணர்ச்சி பிறந்திருக்கிறது. அது யாதெனில், தமிழ்மொழியானது பண்டைக்காலத்தில் அடைந்திருந்த புகழின் அளவு சிறிதெனவே தோன்றச் செய்யும் மேன்மையை அம்மொழி இனி அடைவதற்கான வழிகளைத் தேடுதல் வேண்டும், அதற்கேற்றவாறு முயலவேண்டும் என்பதே. பல பத்திரிகைகளின் வாயிலாகவும், பிரசங்கங்களிலும் புதிது புதிதாய் உண்டாகிவரும் தமிழ்க் கழகங்களை ஏற்படுத்துங்காலும், அவற்றின் ஆண்டு நிறைவிழாக்கள் தோறும் தமிழ் மக்கள் இவ்வுணர்ச்சியை வெளியிட்டு வருகின்றனர். இது மிகவும் பாராட்டத் தக்கது.

புதிதாய் இவ்வுணர்ச்சியைப் பெற்றுவரும் யாவரும் தம்மாலியன்றவளவு தமிழின் நலத்தைநாடி உழைக்க இன்னும் பல சங்கங்களையும் பத்திரிகைகளையும் ஏற்படுத்தி, இதுவரை உண்டாகி உழைத்துவருவனவற்றை ஆதரித்து, அவற்

றுக்குப் பணம்முதலிய இன்றியமையாதனவற்றை உதவி, தமது ஊக்கத்திற் சிறிதை அவற்றுக்கும் அளித்து, அவற்றைப் பலரும் பேணுமாறு தூண்டிவருவாராகில், தமிழானது சீக்கிரத்தில் தழைத்து வளர்ந்தோங்குமென்பதற்கு ஐயமில்லை.

தற்காலத்தில் மேலை நாடுகளிலும், கீழ்நாடாகிய ஜப்பானிலும், ஆராய்ச்சியும் அறிவும் நாளுக்குநாள் பெருகிவர, அந்நாட்டு மொழிகளும் அதற்கேற்ப வளர்ந்து வருகின்றன. நமது தமிழ்நாட்டிலோ அவ்வாறின்றி, யாவர்க்கும் பொதுவாகிய இப்புதிய அறிவைத் தமிழ் மக்கள் சிறிதும் பெறாதிருக்கின்றனர். இதனால் நாட்டின் வளர்ச்சியும், மொழியின் வளர்ச்சியும் ஒருங்கே குன்றிப்போயின. புதிய அறிவைப் பெறவேண்டுமென்னும் அவாவை தமிழ்மக்களுள் பெருக்கி, அவர்களுக்கு அவ் அறிவையும் புகட்டுவதே, சான்றோரின் முதற்கடமையாகும்.

இந் நோக்கத்தோடுதான் நான்கு வருஷங்களுக்கு முன் நமது சங்கம் கூட்டப்பட்டு, தமிழர் நேசன் என்னும் இப் பத்திரிகையும் அதுமுதல் நடந்துவருகிறது. நமது பத்திரிகை இத்துறையில் ஏதோ ஒருவாறு உழைத்துவருகிறது. தமிழில் பற்றுடையாரும், தமிழர்மீது அன்புடையாரும் அதைக் காப்பாற்றி வளர்த்து, அதனைத் தமிழின் வளர்ச்சிக்கும் தமிழரின் மேம்பாட்டுக்கும் காரணமான சிறந்ததொரு கருவியாக்க முயல முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். நமது நோக்கம் நிறைவேறுமாறு கடவுள் அருள்புரிவாராக.

சி. சதாசிவய்யர்,
தலைவர், தமிழர் கல்விச் சங்கம்.

தேவை.

Wanted.

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில் தமிழ்ப்பண்டிதரா
யிருக்கும் ஸ்ரீமான் ஊ. சா. வெங்கடராம ஐயர் எழுதியது.

வேண்டுவது உலகின் வேலைசெயப் பலர்;
ஆண்டவன் அடியே அவர்க்குச் சம்பளம்;
பட்டம் வயது இவை பார்ப்பதோ இல்லை;
அவரோ திருத்தக்காரர் ஆவர்.
எனினும் பிறரைத் திருத்தற்கு எண்ணார்
தம்மைத் திருத்தித் தாம் பிறர்க்கு உறுவழி
காட்டிக் கடனுக் காசினி யோரிடத்து
அன்புபூண்டு, ஐம்புலன் அடக்கி,
அருள்உரு வாகுல்ஆம் அவர் தொழிலே.

ஜனனக் குறிப்பு.

Birth Data

ஸ்ரீமான்களான S. K. பார்த்தசாரதி B.A. B.L., V. K. பார்த்தசாரதி B. A. B. L. இவர்கள் எழுதியது.

சோதிடசாத்திரமென்றால் என்ன? அதன் நோக்கமும் பயனும் யாவை? ஜாதகம் என்றால் என்ன?—என்ற இவைகளைப்பற்றி முன்னொரு பிரதியில் விவரித்துரைத்தோம். இனி ஜாதகத்தை எப்படிக் கணிப்பது? அதற்கு வேண்டிய முக்கிய விவரங்கள் யாவை? என்பதைப்பற்றிச் சற்று விவரித்துரைப்போம். ஜாதகத்தைச் சரியாகக் கணித்தால் தான் சோதிட சாஸ்திரத்தின் உண்மையும் பெருமையும் விளங்கும்.

ஒரு ஜாதகத்தைக் கணிக்க ஆரம்பிப்போமாகில் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய அம்சங்கள் ஐந்தாம். அவை யாவன. பிறந்த இடம், வருடம், மாதம், தேதி, காலம் அல்லது நேரம். இவ்வைந்துள் ஏதேனும் ஒன்றிலாவது சிறிது பிசகு நேரிடினும் ஜாதகம் மாறுதலடைந்து விடும். ஜனன இடமும் காலமும் லக்னத்தைத் தீர்மானம் பண்ணுவதற்கு அத்தியாவசியமானவை. நம்முள் பலர், உலகமுழுதும் சூரியோதயாஸ்தமனம் ஒரே சமயத்தில் வந்து போகிறதென்று எண்ணி ஜனன இடத்தைக் கவனியாது அடியோடு அலக்ஷியஞ் செய்து, ஜாதகி எந்த இடத்தில் பிறந்த போதிலும் ஒரேவிதமான ராசிமானத்தை உபயோகித்து லக்னம் தீர்மானிக்கிறார்கள். இது சுத்தபிசகு. இதன் விவரம் பின்னால் விரித்துரைக்கப்படும். கிரகங்கள் ஒவ்வொரு தினமும், மாதமும், வருட-

மும் தத்தம் நிலைகள் மாறிவருவதால் ஜாதகி பிறந்த வருடம், மாதம், தேதியையும் சரியாகக் குறித்துக் கொள்ளவேண்டும்.

1. இடம்:—உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசமும் பூகோளத்தின் வெவ்வேறு பாகங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது என்ற விஷயம் யாவருமறிந்ததே. உலக அமைப்பை நன்றாய் அறிந்தவர்களுக்கு, ஒருபாகத்தில்சூரியோதயமாகும் பொழுது மற்றொரு பாகத்தில் சூரியாஸ்தமன சமயமாயிருக்கும் என்பதும் தெரிந்திருக்கும். ஆகவே ஓரிடத்தின் நாழிகை மற்றோரிடத்தின் நாழிகையைப் போல் இராது. வேறுபட்டேயிருக்கும். உதாரணமாக: இங்கிலாந்திலுள்ள க்ரீனிஜ் (Greenwich) என்னும் இடத்தில் மத்தியானம் 12 மணியாயிருந்தால், நமது சென்னையில் சாயங்காலம் 5 மணி 21 நிமிஷமாக இருக்கும். இது தவிர ராசிமானமும் வேறுபடும். இதன் காரணத்தைச்சற்று விளக்குவோம்.

பூகோளபடமொன்றைப் பார்ப்போமாகில் மத்தியரேகை (Equator) என்றதோர் ரேகையையும், அதற்கு வடக்கிலும் தெற்கிலுமுள்ள தேசங்கள் இந்த மத்திய ரேகையினின்றும் பல ரேகைகளால் அளவிடப்பட்டிருப்பதையும் காணுவோம். பின்கூறப்பட்ட அளவு ரேகைகளுக்கு அக்ஷாம்சரேகை(Latitude)என்றும், மத்திய ரேகைக்கு வடக்கிலுள்ளவைகட்கு உத்தர அக்ஷாம்சரேகை (North Latitude) என்றும் அதற்குத் தெற்கிலுள்ளவைகட்கு தக்ஷிண அக்ஷாம்சரேகை (South Latitude) என்றும் பெயர். நமது இந்தியா தேசம் இருப்பது உத்தர அக்ஷாம்ச பாகத்தில். இந்த ரேகையளவு பாகை (Degrees=°) கலை (Minutes=!) களால் குறிக்கப்பட்டிருக்கின்றது. நாம் இருக்கும் சென்னை உத்தர அக்ஷாம்ச

பாகத்தில் 13 பாகை 4 கலையில் (13°4′ N. Lat) உள்ளது. இதைத்தவிர; கிரீனிஜ் (Greenwich) ஜிலுள்ள நக்ஷத்திர சாலையை (Observatory) பிரதானமாகவை வத்துக்கொண்டு அதற்குக் கிழக்கிலும் மேற்கிலுமுள்ள தேசங்களை தீர்க்க. ரேகை (Longitude) என்ற ரேகைகளால் பாகை, கலைகளாக அளவிட்டிருக்கிறார்கள். கிழக்குப் பாகத்திலிருப்பவை குணக தீர்க்க ரேகை (East Longitude)யிலிருப்பதாகவும், மேற்கு பாகத்திலிருப்பவை குடக தீர்க்கரேகை(West Longitude) யிலிருப்பதாகவும் கூறப்பட்டுவருகின்றன. நமது சென்னை குணகதீர்க்கரேகை 80 பாகை 15 கலையில் (80.15 E. Long) இருக்கிறது. ஒவ்வோர் தேசமும் இடமும் அக்ஷாம்ச பாகத்தில் எந்த பாகையிலிருக்கிதோ அதற்கேற்பத் தன் ராசிமானத்திலும் வேறுபட்டிருக்கும். நம்முள் பலர் இவ்வக்ஷாம்ச வித்தியாசத்தின் மகிமையைக் கவனியாது எல்லாத் தேசத்திற்கும், மேஷம்-4 $\frac{1}{4}$; விருஷபம் 4$\frac{3}{4}$; மிதுனம் 5$\frac{1}{4}$; கடகம் 5$\frac{1}{2}$; ஸிம்ஹம் 5$\frac{1}{4}$; கன்னி 5; துலாம் 5; விருச்சிகம் 5$\frac{1}{4}$; தனுசு 5$\frac{1}{2}$ மகரம் 5$\frac{1}{4}$; கும்பம் 4$\frac{3}{4}$; மீனம் 4$\frac{1}{4}$; நாழிகையென ஒரே மாதிரி ஸமமானராசிமானத்தைக்கொண்டுகணக்கிட்டு லக்கினம் நிர்ணயித்து விடுகிறார்கள். உண்மையில் ராசிமானம் எல்லா இடத்திற்கும் ஒரே மாதிரியாக இல்லை. அக்ஷாம்ச வித்தியாசத்திற் கேற்ப மாறிவருகிறது 13°4′ல் உள்ள நமது சென்னைக்கு ராசிமானம் இஃது:-

	க.	விக.		க.	விக.		க.	விக.
மேஷம்	4	28;	விருஷபம்	5	3;	மிதுனம்	5	28;
கடகம்	5	22;	ஸிம்ஹம்	5	8;	கன்னி	5	4;
துலாம்	5	16;	விருச்சிகம்	5	29;	தனுசு	5	20;
மகரம்	4	45;	கும்பம்	4	16;	மீனம்	4	10.

இதனால் சரியான ராசிமானத்தை விட்டு முற்கூறப்பட்ட ஸம

மானத்தை வைத்து லக்னம் நிர்ணயிப்பதால் உண்டாகும் பிசகு நன்குவிளங்குகிறதல்லவா? ஆகவே ஜாதகம் கணிக்க வாரம்பிக்கும்பொழுது முதல் முதலில் ஜாதகி பிறந்த இடத்தையும் அதன் அக்ஷாம்சரேகை பாகை (Latitude, Degree) தீர்க்க ரேகை பாகை (Longitude, Degree) களையும் குறித்துக் கொள்ள வேண்டுவதவசியம்.

2, 3, 4. வருடம், மாதம், தேதி:—இதைக்குறிக்கும் விதம் நம்முள் அநேகமாய் யாவருமறிந்த விஷயமாதலால் இதைப்பற்றி அதிகமாக ஒன்றும் கூறவேண்டுவதில்லை. ஆயினும், சாந்திரமானம் அனுஷ்டிப்பவர்கள் திதிகளையேதேதிகளாகவும், ஸௌரமானம்அனுஷ்டிப்பவர்கள் சூரியோதய முதல் மறு சூரியோதயவரையிலுள்ள தினங்களையேதேதிகளாகவும் பாவித்து வருகின்றனர் என்பதை ஞாபகப்படுத்த வேண்டிய தவசியமாயிருக்கிறது.ஜனனத்தேதிகுறிக்கும்போது மட்டும். சற்று ஜாக்கிரதையாய் எவ்விதச் சந்தேகமுமேற் படாவண்ணம் குறிக்கவேண்டும். இவ்விஷயத்தில் அடிக்கடி சந்தேகம் உண்டாவதுசகஜம். நமது நாட்டார், சூரியோதய முதல் மறு நாள் சூரியோதயவரை யிருப்பதையே ஒரு தினமாகக் கொள்கின்றனர். ஆனல் ஆங்கிலத்திலோ இன்று நடுராத்திரி முதல் மறுநாள் நடுராத்திரி வரையிருப்பதையே ஒருதினமாகக் கொள்கின்றனர். ஓர் ஜாதகி, ரௌத்ரி௵ மாசிமீ 21௳ ராத்திரி 3 மணிக்குப் பிறப்பதாக வைத்துக் கொள்வோம். ஸௌரதமிழ் கணனப்படி ரௌத்திரி௵ மாசிமீ 21௳ ராத்திரி 3 மணி என்றும், சாந்திரமானப்படி ரௌத்ரி சம்வத்ஸரம் மாகபகுளம் தசமி ராத்ரி 3 மணி என்றுஞ் சொல்லப்படுவது ஆங்கிலக்கணக்குப்படி 1921௵ மார்ச்சுமீ 5௳ காலை 3 மணி என்று சொல்லப்படும். பஞ்சாங்கங்களில் பார்ப்போமாகில், மார்ச்சுமீ 5௳ யென்பது மாசிமீ 22௳ மாகபகுளம்

ஏகாதசி என்று கூறப்பட்டிருக்கும். இதனால், தேதிகுறிக்கை யில் ஆங்கிலத்தேதிக்கும்,தமிழ்த் தேதிக்கும் குழப்பமேற்படு வது சகஜம் ஆனால் தேதிகுறிக்கும்பொழுது மாசிமீ 21உ ராத்திரி 12 மணி முதல் மாசிமீ 22உ ராத்திரி 12 மணி வரையில் மார்ச்சுமீ 5உ என்பதை ஞாபகம் வைத்துக் கொள் வோமாகில் இத்தகைய சந்தேகம் ஒன்றும் ஏற்படாது.

5 நேரம்:--பலன் சொல்லுவதற்காக உபயோகப் படுத்தப் படும்ஜாதகத்தைக்கணிப்பதற்கு வேண்டியதென மேற் சொல் லப்பட்ட அம்சங்கள் யாவற்றினும் ஜனனகாலக்குறிப்பே மிக வும்அவசியமானது. நாடிக்கிரந்தங்களில் ஒவ்வொரு 24 விநாடி களுக்கும் வெவ்வேறு தனித்தனி ஜாதகங்கள் குறிக்கப்பட்டு வருவதையும், சாதாரணமாய், ஜனன காலக் குறிப்பில் 4 நிமிஷ வித்யாச நேரிடுமாகிலும் பலன் விஷயத்தில் சுமார் ஒரு வருடவித்தியாசமேற்படு மென்ற விஷயத்தையும் கவனிப் போமாகில் ஜனன காலத்தை நாம் எவ்வளவு நுட்பத்து டனும்ஜாக்கிரதையுடனும் கவனித்துக் குறிக்க வேண்டுமென் பது யாவர்க்கும் விளங்கும்.

டாலமி (Ptolemy) என்னும் பிரசித்திபெற்ற கிரேக்கர் அவரது "டெட்ரா-பிப்ளாஸ்" (Tetra-biblos) என்னும் புத் தகத்தில், ஆதியில் கருப்பப்பையில் கர்ப்போத்பத்தியாகும்கா லமே (Time of Conception) சோதிடவாராய்ச்சிக்காரர்களு க்குப் பிரதானமான தென்றும், பிரசவகாலம் (Parturition) அதாவது, குழந்தை தாயின் வயிற்றினின்றும் வெளிப்பட்டு பிறக்கும் வேளை, மேற்கூறப்பட்ட கர்ப்போத்பத்தி காலத்தி ற்கு அடுத்தபடியானதே யென்றுங்கூறி, அப்படிக்கிருந்த போதிலும், கர்ப்போத்தி காலத்திற்குப் பின்னிட்டதாயிருப் பினும், பிரசவகாலம் பலத்தில் இக்கர்ப்போத்பத்தி காலத்தி

குற்ச் சமமானதென்றும், அதைவிடப் பூரணமானதென்றும் கூறியிருக்கிறார். ஆனால், நமது உலகநடவடிக்கைகளில், பல காரணங்களால் பிரசவத்தில் முடியக்கூடிய சரியான கர்ப்போத்பத்தி காலத்தைக் கண்டுபிடித்தல் அரிதாயிருப்பதால், இதைவிட, குழந்தை பிறக்கும் ஜனனகாலத்தையே ஜாதகங்கணிப்பதற்கும் பலன் கூறுவதற்கும் மூலாதார அம்சமாக நாம் எடுத்துக்கொள்கிறோம். இதனால் பிசகொன்றும் ஏற்படாதென்பதே ஆராய்ச்சிக்காரரது அபிப்பிராயம். கர்போத்பத்தி, ஜனனம் ஆகிய இவ்விரண்டு காலங்களைக் கொண்டும் கணிக்கப்படும் இருஜாதகங்களும், ஒரு நியமத்தினால் ஒன்று பின்னொன்று பொருத்தப்பட்டிருக்கிறதென்றும், கர்ப்பப்பைக்குள் கர்ப்போத்பத்தி முடிந்ததும் அப்பிரதம நிலையைச்சூழ்ந்து அதற்கேற்பட்டிருக்கும் ஏதோ சில சந்தர்ப்பங்களுக்குத்தகுந்தாற்போலவே தான் பிரசவம் உண்டாகிறதென்றும், ஜனனகாலத்தின் கிரகங்களின் நிலையும் நோக்கமும், அப்பிரசவத்திற்குக் காரணமாயிருந்த கர்ப்போத்பத்தி ஏற்பட்டகாலத்திலிருந்த கிரகநிலைக்கும் நோக்கத்திற்கும் இணங்கிய வல்லமை பெருந்தியவனவா யிருக்கின்றன வென்றும் டாலமி கூறியிருக்கிறார். சோதிடசாஸ்திர நிபுணராகிய வராஹமிஹிரரும் தனது பிருஹத்ஜாதகம் என்ற புத்தகத்தில், நிஷேககாலத்தைப் பற்றிக்கூறும் 4-வது அத்யாயத்தில் 21-வது ஸ்லோகத்தில் இதேமாதிரி அபிப்ராயப்பட்டு புணர்ச்சி காலத்தினின்றும்' (Time of Coitus) ஜனனகாலத்தைக் கண்டு பிடித்து முற் கூறும் வகையையும் கூறியிருக்கிறார்.

எனினும், கர்போத்பத்தி காலத்தைவிட்டு ஜனனகாலத்தையே நாம் முக்கியமாகக் கவனிக்க நேரிடுகிறதாகையால், இந்த ஜனனகாலத்தை எப்படி அறிவது? எப்படிக்குறிப்பது? என்று தெரிந்து கொள்ள வேண்டியதவச்யமாகிறது. ஜனனம்

என்றால் என்ன? தென்னிந்தியாவில் பலர் ஜலோதய காலத்தை அதாவது பனிக்குடம் உடையும் (Rupture of the membrane) வேளையைக் குறிக்குக் கொள்ளுகிறார்கள். கர்ப்பப்பையைவிட்டுக் குழந்தைவெளிப்படும் பிரசவகாலத்தில் முதல் நிலைமை இப்பனிக்குடம் உடைவதே யென்றபோதிலும், நாம் சம்பந்தப்பட்டவரையில், அச்சமயம் குழந்தைக்கு உயிர் இருக்கிறதோ இல்லையோ வென்று நாம் அறியமாட்டாத சந்தேகஸ்திதியிலிருக்கிறோமாகையால், அவ்வேளையை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஜாதகம் கணிப்பதும் பலன் சொல்வதும் பிசகாகும். இதேமாதிரிதான் சிரோதய காலத்தை (தலைதோன்றும் காலத்தை) ஆதாரமாக வைத்துக் கொண்டு ஜாதகம் கணிப்பதுவும். மேலும் சிரோதயகாலத்தை ஆதாரமாகவைத்துக் கொள்வோமாகில் சிலவேளை உண்டாகிருஷ்டோதயகாலத்கும்தையுங் (முதகு முதலியன முதலில் தோன்றுவது) கவனிக்க வேண்டுமல்லவா? இதை யெல்லாம் விட்டு வேறுசிலர் பூஸ்பரிசவேளையையே (குழந்தை முற்றிலும் வெளிவந்த வேளையை) ஜனனகாலமாகப் பாவிக்கிறார்கள். ஆராய்ந்து பார்க்கில் இதுவும் சரியானவேளையல்ல. ஏனெனில் சிலவேளை குழந்தைகள் கர்ப்பப்பையிலேயே இறந்து உயிரற்று விடுவது நாம்யாவர்க்கும் தெரிந்த விஷயமே. இப்படிச் செத்துப் பிறக்கும் (Still-born) குழந்தைகளின் ஸ்திதியினின்றும் நாம் சிறிது அறிந்துகொள்ளலாம். என்னெனில்: ஜாதகவிஷயத்தின் பொருட்டு நாம் கவனிக்கவேண்டியது கர்ப்பப்பையினின்றும்சதை, தசை, எலும்பு முதலியன அடங்கியதோர் சுமை வெளிப்பட்டு விழுவதைப் பற்றியல்ல; நாம் கவனிக்கவேண்டியது தாயின் வயிற்றினின்றும் வேறுபட்டு, தனக்காகத் தானே உயிர்த்திருக்கும் சக்தி பெற்றதோர் ஜீவன் வெளிப்படுவதையே, ஜனன

காலம் என்பதும் இந்த ஜீவன் உயிருடன் வெளிப்படும் வேளேயே. சுவாசம் வருதலும், மார்பு அடித்துக் கொள்ளுதலுமே ஜீவன்உயிர்த்திருப்பதை யுணர்த்தும் பிரதான அடையாளங்கள். ஆகவே, குழந்தை பிறந்ததும், முதல் குரலுடன் அழுகை, அது விடும் முதல் சுவாசமே அதன் ஜனனத்தைத் தெரிவிக்கும் அடையாளம். ஆகவே, குழந்தை கொடுக்கும் முதல் குரலேயே, (அழுகையையே,) சுவாசத்தையே,-நாம் சாவதானத்துடன் கவனித்து, நுட்பத்துடன் குறித்து ஜனனகாலமாகக் கொள்ளவேண்டும். இதுதான்உண்மையான ஜனனகாலமாகுமேயொழிய, பலர்குறிக்கும் ஜலோதய வேளேயோ, சிரோதய வேளேயோ, பூஸ்பரிசவேளேயோ சரியான ஜனன காலமாகமாட்டாது. இதனலே, தத்வசாஸ்திரத்தில், குழந்தை பிறந்ததும் 'க்வா' 'க்வா' 'க்வா' [ஸம்ஸ்கிருதத்தில், ,க்வா' என்ற பக்கத்திற்கு 'எங்கே' என்பது பொருள்] என்று அழும் அழுகையானது, இதுகாறும் பரந்தாமனுடன் ஐக்யப்பட்டு, அவனது மலர்ந்த செந்தாமரை முக மண்டலத்தைக் கண்டு ஆனந்தித்துக் கொண்டேயிருந்த ஆன்மாவானது, மாயை அல்லது ஜடவாயு வென்னும் திரையினல் திடீரென்று எதிர்பாராதிருக்கையிலும் அன்னனது முகக்காட்சியினின்றும் மறைக்கப்பட்டு, தான்முன் கண்டு களித்துக் கொண்டேயிருந்த வதனம்காணப்பெறது, அது 'எங்கே' 'எங்கே' 'எங்கே' என்று கேட்டுத் தேடித்தவிக்கும் குரல் போலாம், என்று சொல்லப்பட்டிருப்பதின் தாத்பர்யத்தின் உண்மையும்.

ஜனனகாலத்தை எப்படிக்குறிப்பது? தென்னிந்தியாவில், பிரஸவத்திற்காகப், பெண்கள், அநேகமாய் தாய் வீட்டுகிறுர்கள். பெண் பிரஸவித்தவுடனே அவளதுதாய், தந்தையர், உற்றார் உறவினர்களுக்கு இருக்கும் முதல் கவலே அப்பொழுது பிறந்த குழந்தையைப்பற்றி யல்ல; தமது

பெண்ணின் தேகசௌக்கிய ஸ்திதியைப்பற்றியே. குழந்தை பிறந்ததும் யாவரும் கேட்கக்கூடிய கேள்விகள் — பிழைத் திருக்கிறதா.? —இருந்தால், —ஆணா? பெண்ணா? உடனே யாவரும் குழந்தையின் தாயின் சௌக்கியத்தைக் கவனிக்கப் போய்விடுகின்றனர். அதுமுடிந்ததும் குழந்தை பிறந்து தாய் சுகமாயிருப்பதற்காக யாவரும் சந்தோஷப்பட்டு வந்த வர்களுக்கு வெற்றிலை, பாக்கு, பழம், சர்க்கரை, கற்கண்டு முதலியன வழங்கி ஆனந்திக்கிறார்கள். அதற்கப்புறந்தான் சாவகாசமாய் வந்து குழந்தை எப்படியிருக்கிறதென்று பார்த்து, எடபொழுது பிறந்தது என்று யோசித்து, ஒவ் வொருவரும் தமக்குத் தோன்றியவாறு மணி நிமிஷங் கூறி ஜனனகாலத்தை ஓர் விஷயமாய் நிர்ணயித்துக் குறிக்கிறார்கள். இந்தக் குறிப்பு எவ்வளவு நுட்பமானதாயும் சரியானதாயு மிருக்கும்? காலங் கழியக் கழிய, சடமாயாவாதமும், (Materialism) சோதிட சாஸ்திர இகழ்ச்சியும் விருத்தி யாகி, ஜனங்கள் ஜாதகங் கணிப்பதையாவது ஜனனகாலத் தைக் குறிப்பதையாவது அடியோடு அலக்ஷியஞ் செய்துவிடு கிறார்கள். எப்பொழுதாவது எவராவது 'பிள்ளை எப்பொ ழுது பிறந்தது' என்றுகேட்டால், 'காப்பிசாப்பிடும் வேளை யில்' 'சூரியாஸ்தமனத்தில்'; 'நிசி ராத்திரியில்'; ராகுகாலத் தில்'; 'பெருமாள்ராத்திரி நம் வீதியில் வந்த பொழுது'; பக்கத்துவீட்டு பசு கன்றுபோட்ட இரண்டு நாழிகைக் கெல்லாம்'; 'ஸ்ரீஜயந்தி ராத்திரி ஆராதனம் முடிந்த நாலு நாழிகைக்கெல்லாம்,; என்று வெகுநுட்பமாய்க் குறித்துக் கூறுகிறார்கள். பிறகு இந்தக் காலத்தைக்கூறி, சோதி டனிடஞ் சென்று ஜாதகங்கணித்துப் பலன் கூறும்படி கேட்கை யில், அச்சோதிடன் ஞாபகப்பிசகாய் 'இதென்ன இப்படிக் கூறுகிறீர்களே; சற்று ஞாபகப்படுத்திக்கொண்டு சரியான

மணி மினிட்டுக்களைக் கூறுங்களேன்' என்று கேட்டு விடுவா ளாகில் கனவான்களுக்குக் கனகோபம்வந்து ஜோதிடசாஸ் திரத்தையும் சோதிடனையும் கட்டுக்கதையென்றும், புளுகு மூட்டை என்றும் திட்டிப் போய்விடுகிறார்கள். இப்படிச் செய்வது பிசகு. குழந்தை பிறந்ததும் அது 'க்வா' என்று கத்தும்போதோ, முதல்சுவாசம் விடும்போது நுட்பமாய்க் கவனித்து சரியான கடிகாரத்தை வைத்துக்கொண்டு ஜனன காலத்தைக் குறிக்கவேண்டும்.

தென்னிந்தியாவில், ஜனனகாலம், சாதாரணமாய் கடிகா ரத்தைக் கொண்டு மணி, மினிட்டுக்களென்றாவது, சூரியோதய முதலோ, சூரியாஸ்தமனமுதலோ இத்தனை கடிகை (நாழிகை) விகடிகை (விநாடிகை) கழித்து என்றாவது குறிக்கப்படுவது வழக்கம்.

முதலில், கடிகாரத்தைக்கொண்டு குறிக்கவேண்டிய முறை யைக் கூறுவோம். நாம் வைத்திருக்கும் கடிகாரம்ஒரு விநாடி கூடப் பிசகில்லாமல் போய்க்கொண்டிருக்கத் தக்கதாயிருக்க வேண்டும். சரியான கடிகாரத்தை வைத்துக்கொள்வதை அலக்ஷியஞ்செய்வது போதாமல், பலர், ஸ்டாண்டார்ட் மணி (Standard Time), சுதேசமணி (Local Time) என்ற இரண்டிற்குமுள்ள வித்தியாசத்தை அடியோடு புறக்கணித்து விடுகிறார்கள். ஸ்டாண்டர்ட் மணியென்பது கடிகாரம் காட்டும் மணி. சுதேசமணி யென்பது ஜனன இடம் தீர்க்கரேகையின் எந்தபாகத்திலிருக்கிறதோ அதைப் பொறுத்து 1 பாகைக்கு 4 நிமிஷம் வீழுக்காடு கணக்கிடப்பட்டு, ஸ்டாண்டர்ட் மணியி னின்றும் கழித்தோ, கூட்டியோ பெறப்பெற்ற வித்தியாசத் தைக் கொண்டு கண்டுபிடிக்கப்படும் மணி-1905 ளு ஜூலை மீ 1 உ வரையில் இந்தியா முழுதிற்கும் ஸ்டாண்டார்ட் மணி

என்னவென்றால், சென்னை நக்ஷத்திர சாலையில் (Observatory) குறிக்கப்பட்டுவந்த மணியே. இது கிரீனிஜ் (Greenwich) மணிக்கு 5-மணி 21 விநாடி முன்னதாக இருந்து வந்தது. ஏனெனில் சென்னை, கிரீனிஜ்ஜிலிருந்து குணதீர்க்கரேகை 80°15' ல் இருப்பதால். ஆனால் 1905ஞு ஜூலை மீ 4உ வெளியிடப்பட்ட 'போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கஜட்' 2-ம் பாகம், 928-ம் பக்கத்திலிருக்கும், 1905-ஞு ஜூன் மீ 16உ கொண்டேஷார் அறிக்கையின்படி, 1905 ஞு ஜூலை மீ 1 உ முதல் சென்னை நக்ஷத்திரசாலையினின்றும் வெளிப்படுத்தப்பட்ட 'புது இந்திய ஸ்டாண்டர்ட் மணி' (New Indian Standard Time) கிரீனிஜ் மணிக்கு 5மணி 30நிமிஷம் முன்னதாக மாற்றப்பட்டது. ஆகவே இந்த புதிய ஸ்டாண்டர்ட் மணி சென்னையின் சுதேசமணியை விட (Madras Local Time) 9 நிமிஷம் 0.4 விநாடி அதிகமாயிருக்கிறது. தென்னிந்தியா இருப்புப்பாதைகளிலும் இப்புதிய ஸ்டாண்டர்ட் மணியே அநுசரிக்கப்பட்டு வருகிறது. ஆனால் ஜாதக விஷயத்துக்காக நாம் எடுத்துக்கொள்ளவேண்டியது சுதேச மணியேயொழிய, ஸ்டாண்டர்ட் மணியல்ல.

ஆயின், சுதேசமணி எப்படிக் கண்டு பிடிப்பது? பிறந்த இடத்தின் குணகதீர்க்கரேகை பாகை, கலைகளைக் கண்டுபிடித்து, அதைஒவ்வொரு பாகைக்கும், 4 மினிட்டு வீதம் பெருக்கினால், கிடைப்பது அவ்விடத்தின் சுதேசமணிக்கும், கிரீனிஜ் சுதேசமணிக்குமுள்ள வித்யாசமாகும். இதற்கு குணக தீர்க்கரேகை ஈடு (E. Longitude Equivalent) என்று பெயர். இதற்கும் ஸ்டாண்டர்ட் மணிக்கும் உள்ள வித்தியாசத்தை, ஜனன காலத்தில் கடிகாரம் காட்டும் மணியுடன் கூட்டியோ, அதனின்றும் கழித்தோ கிடைப்பது, அந்த இடத்தில், அந்த காலத்தின் சுதேசமணி. 1905 ஞு ஜூலை மீ 1 உ வரை,

ஸ்டாண்டர்ட் மணி கிரீனிஜ் மணிக்கு 5 மணி 21 மினிட் அதிகமானது என்பதையும் அதற்கப்புறம் 5 மணி 30 மினிட் அதிகமானது என்பதையும் மறக்கக்கூடாது. உதாரணம்:— மசூலிப்பட்டணத்தில் (குணதீர்க்கரேகை 81°15') ஒருவன் கடிகாரமணிப்படி ராத்திரி 8.10 க்குப் பிறந்ததாக வைத்துக் கொள்வோம். இந்த ஜனனம் 1905 ஹு ஜூன் மாசமாயிருந்தால் சுதேசமணி 8.14 ஆகிறது. தீர்க்கரேகை ஈடு $=81\frac{1}{4}\times 4=325'=5$ மணி 25 விமிஷம்: அதாவது ஸ்டாண்டர்ட் மணியை (5-ம 21-வி) விட 4 விமிஷமதிகம்; ஆகவே சுதேசமணி $=8.10\times 0.4=8h14$ விமிஷம். ஜனனம் ஜூலை மாதமாயிருந்தால், ஸ்டாண்டர்ட் மணி 5·30 மணி ஆகிறதால், சுதேசமணி (5,30—5. 25=0.5) 8.10—0.5= 8. ம. 5. வி.

இனி கடிகை விகடிகையாகக் கணிக்கும் விதத்தைச்சற்று கவனிப்போம். சாதாரணமாய்ச் சூரியோதயமுதலே கணக்கிடுவது வழக்கமாயிருப்பினும் சிலர் சூரியாஸ்தமன முதல் கணக்கிடும் வழக்கம் வைத்திருக்கிறார்கள். ஆனால் சௌகர்யார்த்தத்தின் பொருட்டு சகலரும் ஒரே விதத்தை உபயோகிப்பதே மேலாகையால் சூரியோதயாதி கணக்கிடுவதே மேல். பூர்வ காலத்தில் நாழிகை குறிப்பது எப்படி என்றால், பகலில் சங்கு அல்லது சாயாயந்திர என்கிற சூரிய கடிகாரமென்னுங்கருவி (Sundial Gnomon) யினாலும், இரவில் ஸ்தூல கண்களினுதவியாலும் கருவிகளின் ஒத்தாசையாலும் விண்ணில் விளங்கும் நக்ஷத்திர சாரவாராய்ச்சி செய்வதாலுமே. இப்படிக் குறிப்பதற்கு அதிக அனுபவமும், மிகுந்த தேர்ச்சியும் திறமையும் வேண்டும். அப்படியிருந்தும், சில வேளை அதில் பிசகு நேரிடுவதுமுண்டு. ஆனால் தற்காலத்திய சோதிடர்களோ பழையகாலத்து சாஸ்த்திரப் பயிற்சித்திறமையின்றி, விண்ணாராய்ச்சித் தேர்ச்சியில்லாது, இவ்விஷயத்தில் அனு

பலமும் ஊக்கமும் இழந்தவர்களாய், கடிகாரத்தை வைத்துக் கொண்டு, விண்ணாராய்ச்சிசெய்து நாழிகை கண்டுபிடிக்கும் வழக்கத்தைவிட்டு, கடிகாரமணியைக் கடிகை விகடிகைகளாக மாற்றுகிறார்கள்: இப்படிச்செய்வதால் ஜாதக விஷயத்தில் பல பிசகுகள் நேரிடுகின்றன. இவர்கள், கடிகாரங் காட்டும் ஸ்டாண்டர்ட் மணியை எடுத்துக்கொள்வது மட்டும் போதாமல் ஒரே மாதிரியான ஸ்டாண்டர்ட் சூரியோதயாஸ்தமன மணிகளையும் உண்டாக்கிக் கொள்ளுகிறார்கள். இவர்களுக்கு ஒரு வருஷம் முற்றிலும், கன்யாகுமரி முதல் இமயமலை வரையிலும் தினந்தினம் ஒரே மாதிரியாக சூரியன் கடிகாரக்கணக்குப்படி, காலை 6 மணிக்கு உதித்து மாலை 6 மணிக்குஅஸ்தமிக்கிறான், இது முற்றிலும் தவறு. நாம் செய்யவேண்டிய தென்னவென்றால்: பிறந்த விடத்திய அந்நாள் சூர்யோதய காலத்தை (Local Sunrise), சுதேசமணிப்படி (Local Time) கணித்து ஜனனகாலத்திய சுதேசமணியை (Local Time at Birth) எடுத்துக்கொண்டு அவற்றிற்குள்ள வித்தியாசத்தை ஒரு மணிக்கு இரண்டரை நாழிகை வீதம் பெருக்கி சூரியோதய கடிகை விகடிகை என்று குறிப்பிடவேண்டும்.

ஆகவே ஜாதகம் கணிக்க வேண்டிய மேற் கூறப்பட்ட ஐந்து விஷயங்களையும் நுட்பமாயும் ஜாக்கிரதையுடனும் ஆராய்ந்தறிந்து குறித்துக் கொள்ளவேண்டும். முக்கியமாய் ஜனனகாலத்தையே சாவதானத்துடன் கவனித்துக் குறித்துக்கொள்ளவேண்டும். இத்தகைய விவரங்களை உண்மையாயும் சந்தேகமில்லாமலும் குறித்துக் கொண்டால் தான் சரியான ஜாதகம் கணிப்பதும், அதைக்கொண்டு உண்மையான பலன் சொல்வதும் எளிதாகும். அப்படிக்கின்றி, இவற்றுள் எதிலாவது ஒன்றிலேனும் எவ்விதப் பிசகேனும் நேரிடுமாகில் ஜாதகமும் மாறிவிடும்; அதைக்கொண்டு கூறிய பலாபலன்களும் பொய்த்துவிடும்.

மூலிகைகளின் பிரதான திரவியம்.

The Active Principles in Medicinal Drugs

ஸ்ரீமான் வைத்திய விசாரத க. கு. நடேசசாஸ்திரியார்,
M.R. A.S. ஸ்ரீமான் எலியூர்க்கர் சுப்பிரமணியசர்மா
இருவருமாக எழுதியது.

வைத்தியத்தில் எம்முறையாயினும் சரியே, உபயோகப் படுத்தப்படும் மூலிகைகள் அனந்தம். இவைகளை ஆராய்ந்து பரிசீலனை செய்து உபயோகம் செய்யவேண்டியதற்கான ஸாதனங்களை ஒவ்வொரு முறையிலும் முன்னோர்கள் அவரவர் ஸம்பிரதாயப்படி நமக்கு எழுதிவைத்திருக்கிறார்கள். அவைகளில் பிரதான திரவியங்களைக் கண்டு உபயோகப்படுத்தல் என்பது மேனாட்டு வைத்திய முறையின் கொள்கை. இக் கொள்கை எம்மட்டு ஆயுர் வேதத்திற்கு ஒற்றுமைப்பட்டது அல்லது அவ்வைத்தியத்திற்கு எவ்வாறு பிரயோஜனப்பட்டதென்று ஆராய்வதே இவ்வியாசத்தின் உத்தேசம்.

பிரதானதிரவியம் என்பது என்ன? ஒவ்வொருமூலிகையையும் ஆராய்ந்து இன்னின்ன திரவியங்கள் சேர்ந்து இம்மூலிகையாகசிருஷ்டிக் கப்பட்டிருக்கிறது என்றும்; அதிலுள்ள எந்தத் திரவியத்தின் ஒரு குணத்தால் அம்மூலிகை, சிகித்ஸையில் உபயோகப்படுத்தப்படும் பொழுது, சரீரத்தில் வேலை செய்கிறதென்றும் தெரிந்து கொள்வதேயாகும்.

இதற்கு ஆங்கிலமுறையில் ஆக்டிவ் பிரின்ஸிபிள் (Active Principle) என்று சொல்லப்படும். இந்த சப்தம், மேனாட்டு வைத்தியர்களால் சர்வசாதாரணமாக உபயோகப்படுத்தப் பட்டு வருவதை யாவரும் கவனித்திருக்கலாம்.

பலவித நூதனஇயந்திரங்களும், நுட்பமான ஆராய்ச்சியும் இரசாயனசாஸ்திரங்களில் அடைந்திருக்கும் தேர்ச்சியும், உடல் பொருள் ஆவி என்னும் மூன்று காரணங்களையும் திருணமாகப்பாவித்துச் செலவிட்டுக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் அற்புதவிஷயங்கள் யாவும் அவர்களுக்கு ஆக்ஷேபத்திற்கு இடமற்ற கௌரவத்தை ஸம்பாதித்துக் கொடுத்திருப்பது உண்மையே இவ்விதச் சகாயத்தைப் பெற்றுள்ள ஒருமுறை மிகவும் சிலாக்கியமானதே. இவ்வித ஸகாயமே ஆங்கில சாஸ்திரவா ராய்ச்சி செய்பவர்களுக்கு மூலிகைகளின் ஆராய்ச்சிக்கு வேண்டிய சௌகரியங்களைக் கொடுத்திருப்பதுடன் இப்பொழுது தீர்மானிக்கப்பட்டிருக்கும் ஒரு நிர்ணயத்திற்கு ஹேதுவாகவிருந்திருக்கிறது.

பிரதான திரவியம் கண்டுபிடிப்பதென்பது வேறு விதங்களில் வெகுவாக உபயோகமிருந்த போதிலும் வைத்திய சாஸ்திரத்திற்கு ஏதாவது பிரயோஜன முண்டா வென்பதே நம்முடைய ஆசங்கை. சாதாரணமாக அதற்கு எவ்வளவு பலம் கட்டப்பட்டபோதிலும் எம்முறைப்படியாயினும் சிகிச்சைக்குப் பிரயோஜனமில்லை என்பது ஆயுர்வேத வைத்தியர்களின் கொள்கை. ஏனெனில் மூலிகைகளுள் அடங்கியிருக்கும் வெவ்வேறு திரவியங்களை ஆராய்ந்து கண்டுபிடித்த மாத்திரத்தில் அதனுடைய குணம் நமக்குத் தெரிவதற்கில்லை. வெவ்வேறு திரவியங்களைத் தெரிந்துகொண்ட பின்னும் அதன் குணங்களையும் பிரபாவங்களையும் நாம் ஆராய்ந்து கொள்ளவேண்டியதாகவிருக்கிறது. ஆகையால் அதையறிந்து

கொள்ளமுடியாதவரை பிரதான திரவியங்களைக் கண்டு கொள்வதினால் யாதொரு பிரயோஜனமும் வைத்தியத்திற்கு ஏற்படாது. இதை உத்தேசித்தே ஆயுர்வேதப் பிரவர்த்தகர்களான ரிஷிகள் ஒவ்வொரு மூலிகையையும், அதன் ரஸம், வீர்யம், விபாகம், பிரபாவம், என்னும் இந்நான்குவகைகளி லும் ஆராய்ந்து அதன் பிரயோஜனத்தை நாம் அடையுமாறு நமக்கு அளித்திருக்கிறார்கள். இந் நான்குவகையிலும் நமக்கு ஒரு மூலிகையைப் பற்றித் தெரியாதவரை பிரதான திரவியம் கண்டுபிடிப்பதில், வைத்தியம் ஸம்பந்தப்பட்டமட்டில், செய்யப்படும் முயற்சிகள் வீணே என்பதை நாம் சுருக்கமாக அடியில் காண்பிப்போம்.

முதலாவது ஆங்கிலமுறைப்படி பார்த்தாலும் ஒருபதார்த்தத்திற்கு தனிமையாய்க் குணம் ஒருவிதமாக விருந்தாலும் ஸம்யோக விசேஷத்தால் அது மாறுபடுகிறது. எப்படியெனில், விபரீதகுணம், விபரீதநிறம், விபரீத ஸ்வபாவம் உள்ள இரண்டு சரக்குகளை நாம் ரஸாயனமுறைப்படி ஸம்யோகம் செய்வோமானால் அந்த ஸம்யோகமான திரவியத்தின் குணம் ஸ்வபாவம் நிறம் எல்லாவற்றிலும் ஸம்யோகத்திற்குக் காரணமாகவிருந்த பதார்த்தங்களைக் காட்டிலும் முற்றும் வேறுபட்டுக் காணப்படுகிறது. இதையே ஆங்கிலத்தில் கெமிகல் காம்பினேஷன் (Chemical Combination) என்று சொல்லுவார்கள். ஆகையால் ஒரு மூலிகைக்குக் காரணபூதமாகவிருந்த வெவ்வேறு பதார்த்தங்கள் ஒருவிதக்குணத்தோடு கூடியிருப்பினும் அவைகள் ஸம்யோகமடைந்து மூலிகை ரூபமடைந்த உடன் வேறு மாறுபட்டகுணத்தை யடைகின்றன.

உதாரணமாக பாதரஸத்தையும் பிராணவாயுவையும் சேர்த்துக்காய்ச்சினால் சிகப்பான ரஸசிந்தூரம் என்று மூன்றுவது தூளானவஸ்து ஒன்று உண்டாகிறது. அல்லாமலும்

மலபந்தம் செய்யக்கூடிய சர்க்கரையாவது தேனாவது சுக்கு அல்லது கடுக்காய் முதலிய திரவியங்களில் கலந்து கொடுக்கும்போது அதன் ஸ்வபாவகுணம் மாறி வேறான பாசனசக்தியுள்ளவைகளாக மாறிவிடுகிறது.

இரண்டாவது. சில மூலிகைகளில் அதன் பிரதித் திரவியங்களையும் கண்டுபிடித்து விட்டபோதிலும் பிரதான திரவியம் இன்னதென்று சொல்லுவதற்கு முடியவில்லை. இவ்விதமாயினும் அதை நாம் சிகித்ஸையில் உபயோகப்படுத்திவருகிறோம். நாம் நினைத்தவண்ணம் வேலையும்செய்துவருகிறது. உதாரணமாக:—விமிரைபூஜாரிஸோமா (?) என்னும் மூலிகையில் ஒரு வாலடைல் ஆயில் (Volatile Oil) இரண்டு ரேஸின் (Resin) டானிக் ஆஸிட், (Tannic Acid) இவைகள் இருக்கின்றன வென்று தீர்மானிக்கப்பட்டபோதிலும் அதன் பிரதான திரவியம் இன்னதென்று சொல்ல முடியவில்லை, ஆனால் அந்தச்சரக்கே ஹிருதயசம்பந்த மானவியாதிகள், ஜாடராக்னி வர்த்தனமாகவும், (நரம்பு) ஒருத்தலைவலி, கில்வாதம், வாந்திபேதி இருமல் கர்ப்பாசய ஸம்பந்தமான வியாதிகளில் உபயோகப்படுத்தப்பட்டுக் குணம் செய்வதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது,

மூன்றாவது:—சில மூலிகைகளில் பிரதான திரவியம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது யாதொருவேலையும் செய்யாமல மத்யஸ்தமாக (Neutral)விருக்கிறது. கலும்பா என்று சொல்லப்படும் மூலிகையின் பிரதான திரவியம் கலம்பின்என்று கண்டுபிடிக்கப்பட்டும் அது யாதொரு வேலையும் செய்யக்கூடியதாகச் சொல்லப்படவில்லை (Neutral body). அப்படியேதான் போடோபில்லி ரிஜோமா என்று சொல்லப்படுவதின் பிரதானதிரவியமான பைக்ரோபோடோ பில்லின் என்பதும்

நான்காவது ஒரு மூலிகையில் பலவேறான திரவியங்கள் ஒன்றுக்கொன்று விபரீதமான குணங்களுடையனவாக இமைக்கப் பட்டிருப்பதும் இவ்வாறு ஏற்படும் சரக்கின் பிர யோஜனம் மாறுபட்டதாகவும் காணப்படுகிறது.

ஐந்தாவது:—பிரதானத்திரவியம் தனியாக வேலை செய் கிறதா அல்லது இதர திரவியங்களுடன் சேர்ந்து வேலை செய் கிறதா என்று சொல்ல முடியவில்லை.

தனியாகவே, இதர திரவியங்களின் சகாயத்தை எதிர்பா ராமல், சரீரத்தில் வேலை செய்கிறதென்றே வைத்துக்கொள் ளுவோம். அப்படியானால் அந்த அல்லது எல்லா திரவ்யங் களுடனும் சேர்ந்தேதான் பிரதான திரவியம் வேலைசெய்கிற தென்று வைத்துக்கொள்வோமானால் பிரதான திரவியம் கண்டுபிடிப்பதில் நமக்குள்ள சிரமம் லாபம்.

எல்லாவற்றிற்கும் மேலாகச் சிருஷ்டியால் ஏற்பட்டிருக் கும் விசித்திரங்களுக்கு நாம் புகல் சொல்லித்தீரவேண்டும். என்னவெனில் மூலிகையாக ஏன் சிருஷ்டிக்கப்படவேண்டும்? வெவ்வேறான பல திரவியங்களை ஒன்றாகச் சேர்த்த சிருஷ்டி கர்த்தாவிற்கு அவைகளைத் தனித்தனியாக அளிப்பதில் என்ன கஷ்டம்? இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்வானேன்? சுலபமாக செய்யக்கூடிய ஒரு வேலையைவிட்டுவிட்டு இவ்வளவு கஷ்டப்பட்டாவது ஸம்யோகம்செய்து நமக்கு அளித்து, அவைகளை, நாம் வாழ்நாள்முழுவதும் செலவிட்டு ஸம்யோகம் செய்யப்பட்டிருக்கும் பதார்த்தங்களை தனித்தனியாக பிரி த்து, அதில் பிரதான திரவியம் இன்னதென்று கண்டுபிடிக்க வழியறியாமல் தவிக்கும்படி நம்மை அமைத்து வேடிக்கைப் பார்த்திருப்பதில் அவருக்கு என்ன லாபம்? நரிக்குக் கல்யா ணம் நண்டுக்கு பிராணாவஸ்தை என்பது போன்ற இந்த லீலை ஏனோ?

எப்பொழுது சிருஷ்டியில் இவ்விதம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அப்பொழுதே அதற்கு ஏதோ பிரயோஜனமிருக்கவேண்டுமென்று அறிந்துக்கொள்ள நமக்கு அவகாசம் உண்டு.

எப்படிஎனில் அகொனைட்என்னும் வத்சநாபிக்கிழங்கை ஆராய்ச்சிசெய்தால் அதில் அனேகம் உப்புகள் இருப்பதாகவும், அதன் பிரதானதிரவியம் அகொனிடைன் என்று சொல்லப்படுமென்றும், இவ்வகொனிடைனைப்போல் அவ்வளவு முக்கியமில்லாவிட்டாலும் அதற்கடுத்தபடியாக இருப்பது அகோனீன் என்றும் பென்ஸோகொனீன் என்றும் சொல்லப்படும் என்றும் இவைகளின் குணங்கள் ஒன்றுக்கொன்று பரஸ்பரம் விரோதமானதென்றும் அறியலாம். அகொனிடைன் என்றும் பிரதான திரவியத்தின் துர்குணங்களை அடித்து அதன் உக்கிரமான தீச்செய்கைகளைத் தடுத்து வேலைசெய்யக்கூடியதாக விருக்கின்றன பின் சொல்லப்பட்ட அகொனீன் பென்ஸோகொனீன் என்பவைகள். பிரதிமூலிகைகளையும் அப்படியே தான் சிகிச்சையில் உபயோகப்படுத்த வேண்டுமென்றும் அவைகளில் பிரதானதிரவியங்கள் கண்டுபிடிப்பது சிகிச்சைக்கு பிரயோஜனமில்லை என்பதும் சிருஷ்டியில் நின்றே அறிந்துக்கொள்ளுவதற்கு இதுவே போதுமான உதாரணமாகலாம்.

(தொடரும்)

மந்திரவாதிகளின் மாய வித்தைகள்.

The Miracles of Magicians.

(தொடர்ச்சி)

3. கயிறு ஏறல்

3. Climbing The Rope

ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி ஐயர், B.A., B.L.,

தொகுத்தெழுதியது.

நமது நாட்டில் எங்கும் சென்று வித்தைகாட்டிகள் காட்டிவரும் மாயவித்தைகளிற் பல வியப்பைத் தருவன. இவ் வித்தைகள் பலவற்றுள்ளும் மிகவும் விந்தையானது இதுவென்றே கூறலாம். இந்த வித்தை காட்டும்பொழுது வித்தைகாட்டி தன் கையில் சுருட்டி வைத்துக் கொண்டிருக்கும் கயிற் சுருளின் ஒரு நுனியைக் கையிற் பிடித்துக்கொண்டு கயிற்றை உயர எறிகிறான். கயிற் சுருள்கள் பிரிந்து கயிறானது நீண்டு ஒரு கழியைப்போல உயர்ந்து நேராக நிற்கின்றது. பிறகு வித்தைகாட்டி கைமேல் கையாய் கயிற்றைப் பிடித்து உயரே ஏறி திடீரென அந்தரத்தில் மறைந்து விடுகிறான்.*

---

* இந்த வித்தை இவ்வளவு விஸ்தாரமாக எப்பொழுதும் செய்யப்படுகிறதில்லை என்றும், சிறிது குறைத்து வேறுவிதமாகவும் செய்யப்படுவதை அனேகர் கண்டிருப்பதாகவும் ஸ்ட்ராண்டு (Strand) பத்திரிகை கூறுகின்றது, இந்தியாவில் உத்தியோகம் வகித்துவந்த ஒரு ராணுவ வீரர் பக்கிரி ஒருவன் கயிற்றைக் கம்பிபோல் நிறுத்திக்கொண்டிருப்பதையும், அதன் மேல் ஒரு பையன் ஏறி மேல்முனையில் நிற்பதையும் படம்பிடித்து அனுப்பிய படமும் அப் பத்திரிகையில் காணப்படுகிறது. இதைப்பற்றி சாஸ்திரி என்ன சொல்லுவாரோ? ப-ர்

மேற் கூறிய சாஸ்திரியார் இந்த வித்தையைப் பற்றிப் பின் வருமாறு கூறுகிறார்.

"பம்பாயில் ஒரு உயர்ந்த கட்டிடத்தின் முற்றத்தில் ஒரு பக்கிரி இந்த வித்தைகாட்டியதை நான் பார்த்தேன். அப்பொழுதுப் பத்துப்பன்னிரண்டு இந்தியரும் என் சீடர்களில் இருவரும் கூடவிருந்தனர். நாங்களெல்லோரும் உட்கார்ந்துகொண்டு நன்கு விழித்துப் பார்த்துக்கொண்டிருந்தோம்.

அப்பொழுது மாலைவேளை. சூரியன் மாலைவாயில் விழும் தருணம். முற்றத்தின் இருபுறங்களிலுமாக நாங்கள் உட்கார்ந்து கொண்டோம். வித்தைகாட்டி வந்தவுடன் குறிப்பிட்ட சில வித்தைகளைச் செய்யப்போகிறதாகக் கூறினான். அவற்றுள் இவ்வித்தையே மிகவும் மேலானதாதலால் அதைக் கடைசிவரை செய்யவில்லை. மாஞ்செடி முளைக்கச் செய்தல் முதலிய வித்தைகளை முதலில் காட்ட ஆரம்பித்தான். அதில் அவன் கவனமாயிருக்கும்பொழுது அவனுக்குத் தெரியாமலே எங்களில் ஒருவன் அவ்வீட்டுள்சென்று மேல்மாடியில் ஓர் அறையில் இருந்து ஒளிந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவனை வித்தைகாட்டிகள் ஒருவரும் கவனிக்கவில்லை.

கடைசியாகக் கயிறு ஏறும் வித்தை காட்டத்தொடங்கினன். பக்கிரிகள் பலர் சேர்ந்து விற்போல வளையமாய் உட்கார்ந்துகொண்டு கைகளை ஆட்டிவீசிக்கொண்டு பாடினர். நடுவில் ஒருபித்தளைப் பெட்டியில்கரி கணகணவென்று எரிந்துக் கொண்டிருந்தது. இன்னும் நான்கு நெருப்புப்போட்ட பெட்டகங்கள் கொணரப்பட்டன.

ஒரு பக்கிரி அப் பெட்டகங்களிலுள்ள நெருப்பின் மீது ஒரு வெள்ளைப் பொடியைத் தூவினன். நீல நிறமான ஒரு வகைத் துர்நாற்றப்புகை அவற்றினின்று எழுந்து படர்ந்தது. அந்த வாசனை எங்களுக்குப் பிடிக்கவில்லை. பொடியைத் தூவும்

பக்கிரி ஏதோ கூவினான். உடனே பாடிக்கொண்டிருப்பவர்களுள் ஒருவன் எழுந்து வெளியே சென்று ஒரு கனத்த கயிற்றை எடுத்துக்கொண்டுவந்தான். சுருட்டி வைத்திருந்த அந்தக் கயிற்றை அப்படியே அவனது யஜமானனிடம் கொடுத்தான். அவனும் அதை வாங்கிக்கொண்டு அந்தப் பெட்டகங்களில் மேன்மேலும் பொடியை தூவப் புகை சூழ்ந்து கொண்டது.

கயிற்றின் ஒரு ஓரத்தைக் கீழே போட்டுவிட்டு மற்றொரு ஓரத்தின் நுனியைப் புகைந்து எரியும் பெட்டகங்கள் ஒவ்வொன்றினுள்ளும் வைத்து வைத்து எடுத்தான். உடனே அம்முனை தீயினால் கனிந்தது. அக்கொள்ளிமுனையை விறுவிறென்று தலையையும் உடலையும் சுற்றிச்சுற்றி வேகமாய்ச் சுழற்றினான். அதைக் கவனிக்கக் கவனிக்கக் கண் அயர்வுற ஆரம்பித்தது. திடீரென அவன் ஆடுவதும் ஓடுவதும் நின்றது, கயிறு சுழலுவதும் நின்றது. ஜிவுஜிவு என்று கனிந்துகொண்டிருக்கும் கயிற்றின் தீமுனையைத் திடீரெனத் தனது வாய்க்குள் வைத்தான். தண்ணீர்ப் பானையில் முக்கினது போலவே சொய்யென்ற ஓசையோடு அந்தக் கயிற்று நுனியிலுள்ள நெருப்பு முற்றும் அவிந்து போயிற்று. இதனிடையெல்லாம் ஓயாது அவனது பரிவாரங்கள் ஆடிப் பாடிக்கொண்டேயிருந்தனர். பக்கிரி நீண்டுகிடந்த கயிற்றைச் சுருட்டியெடுத்தான். அவன் இனி என்ன செய்யப்போகிறானோ என்று நினைத்துக் கொண்டிருக்கையில் நாங்கள் எதிர்பாராதபடி திடீரெனக் கயிற்றைத் தூக்கி உயரே எறிந்தான். கயிற்றின் ஒரு முனை மட்டிலும் அவன் கையிலேயே இருந்தது.

மேலெறிந்த கயிற்சுருள் பிரிந்து கயிறு நீண்டது. கன்னங் கறேலென்று வளைந்துவளைந்து எழும் அக்கயிறு ஒரு பாம்பு போலத்தோற்றிற்று. உயரத்தூக்கிய வேகம்

குறைந்ததும் கயிறு மறுபடியும் கீழே விழத்தொடங்கியது. பக்கிரி திடீரென ஊக்கக்கூவி அதை அச்சுறுத்துவதுபோல், தன் கையை ஓங்கினான் எல்லாப்பொருள்களையும் இழுக்கும் ஆகர்ஷண சக்தியே அற்றுப் போனதுபோல் கயிறு நடு அந்தரத்தில் நின்று விட்டது. இலேசாகச் சிறிது அசைந்துகொண்டிருந்தது.

பக்கிரி பெரிதாகப் பெருமூச் செறிந்து, தனது இடது கையால் தன் மார்பில் அடித்துக்கொண்டான். கயிறு சிறிது சிறிதாகக் கீழிறங்கிக் கொண்டிருந்தது. அவனைப் பார்த்தால் மறுபடியும் ஒரு பெரு முயற்சிக்குத் தயார் செய்வது போல் தோன்றிற்று. அதற்காகச் சிறிது இளைப்பாறுவது போலிருந்தது.

திடீரெனக் கூக்குரலிட்டுக் கதறிக் கயிற்றைச் சுண்டிச் சுண்டி உதறினான். கயிறு மெல்ல மெல்ல மேலேறத் தொடங்கியது. கொஞ்ச நேரத்தில் கயிறு நன்கு உயர்ந்து கம்பு போல் விறைத்து நின்றது. பக்கிரியும் வலதுகையால் கயிற்றைப் பிடித்துக்கொண்டு தொங்குவது போலிருந்தது.

யாரோ அதோபார் என்று கத்தினார்கள். நாங்கள் உடனே நிமிர்ந்து பார்த்தோம். கயிற்றின் மேல் முனை புகைய ஆரம்பித்து அதனின்று சுருள் சுருளாய்ப் புகை கிளம்பிக் கொண்டிருந்து. அதன் நடுவில் கயிற்று நுனி மங்கிய சிவப்பு நிறமாகக் காணப்பட்டது. வரவரப் புகை மிகுந்து உயர எங்கும் ஒரே புகையாகிவிட்டது. அதற்கு மேலிருக்கும் ஒன்றுமே தெரியவில்லை. கீழிருக்கும் பக்கிரியோ கயிற்றைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டபடியே இருந்தபோதிலும் அவனுடைய கால்கள் பூமியில் படியவில்லை. அவன் வலக் கையால் கயிற்றைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தான்,

சிறிது நேரம் சென்றதும் அவன் கயிற்றைத் தன் இடக்கையாலும் இறுகப் பற்றிக் கொண்டான். பிறகு கை கையாகக் கயிற்றைப் பிடித்து உயர ஏறினான். அவன் ஏற ஏறத் தொங்கிக்கொண்டிருந்த கீழ் முனையும் வரவர மேலேறத் தொடங்கிற்று. கடைசில் அவன் மூடியிருண்ட புகையினுள் மறைந்து விட்டான். பின்பு கயிறும் வரவரச் சுருங்கிப் பின்பு முற்றிலும் மறைந்து விட்டது. பின்பு சிறிது சிறிதாகப் புகை நீங்கியதும் சுற்றியிருந்தவர் யாவரும் மூக்கில் கையை வைத்து அண்ணாந்து உயரப்பார்த்த வண்ணமாகவே இருந்தனர். உயரே கயிற்றையும் காணோம், பக்கிரியையும் காணோம். நிர்மலமான ஆகாசம் மட்டிலுமே கண்ணுக்குத் தெரிந்தது. யாவரும் வியப்புற்றுப் பேசக்கூடப்பயந்தவர் போல் திகைத்து நின்றனர். சிறிது நேரத்துக்குப் பின்பு யாரோ ஓடி வருவது போல் சத்தம்கேட்டது. பக்கிரியும் இடுப்பில் சுற்றிய கயிற்றுடன் ஓடிவருவதைக்கண்டோம்.

இவ்வாறு அவன் செய்வது எங்ஙனமென்று பக்கிரியைக் கேட்டதற்கு அவன் பட்டினி கிடந்து, உடலை வாட்டி, நிஷ்டையில் பலமுறை யிருந்து தியானிப்பதாலேயே இவ்வகையான அதிசய சக்தியைத் தான் பெற்றதாகவும், அதனாலேயே இவ்வண்ணம் நடக்கமுடிந்ததென்றும் கூறினான் நாங்கள் பார்த்ததில் யாதொரு வித ஏமாற்றமும் இல்லையென்றும், மெய்யாகவே தான் இயற்கை விதிகளுக்கு மாறாக நடக்கக்கூடுமென்றும் சொன்னான்.

சிறிது நேரத்தில் என்னுடைய ஆள், உயரப் போயிருந்தவன், வந்து சேர்ந்தான். அவன் கூறியதிலிருந்து இவ்வாறு இவ்வித்தை செய்யப்படுகிறதென்பதை அறிந்துகொண்டேன்.

என்னுடைய ஆள் மேல் மாடியிலுள்ள அறையிலிருந்து ஜன்னல் வழியாகக் கீழே நடப்பதையெல்லாம் ஒளிந்து பார்த்

துக்கொண்டிருந்தானும். அவன் இருப்பது கீழுள்ளவர்கள் ஒருவருக்கும் தெரியாதாம். அவன் இருந்த இடத்திலிருந்து அயல் வீட்டு மேல் மாடங்கள் கூடப் பல தெரிந்தனவாம். கீழே வித்தை செய்வதை யெல்லாம் நன்கு கவனித்துக் கொண்டிருந்தானும். பக்கிரி நெருப்பில் பொடியைத் தூவிய தும் எழுந்த புகையானது அவனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை யாம். எப்படியாவது அந்த துர்நற்றத்தைப் பொறுத்துக் கொண்டு முற்றிலும் கவனித்துப் பார்த்து விடுவதென்று தீர்மானித்தானும்.

பக்கிரி கயிற்றின் ஒரு நுனியை நெருப்பிலிட்டு அதைச் சுற்றிச் சுழற்றிவரும் பொழுது எல்லாரும் அவனையே கூர்மை யாகக்கவனித்துக் கொண்டிருந்தார்களாம். அப்பொழுது மேலி ருந்து மெல்லிய கயிறு ஒன்று ஆடிப் பாடும் வித்தைகாட்டி களின் பக்கமாகத் தொங்கவிடப்பட்டதாம். அவர்களுள் ஒரு வன் அதை மெல்லென எடுத்து அதைக் கீழே கிடக்கும் கயற் றின் நுனியில் கட்டினனும். பக்கிரி கயிற்றை மேலெறிந்த பொழுது அவனது ஆள் மெல்லிய கயிற்றை இழுத்து வாங்கி னனும். அதுதான் தடிக் கயிற்றைத் தொங்கப் பிடித்ததாம்.

நடப்பன புழுவதையும் மறைத்தற் பொருட்டு மேலிரு ந்து ஒரு சிறு முடிச்சொன்றைப் பொடிக் கயிறு வழியே நழுவிச்சென்று தடிக் கயிற்றின் மேல் முனையின்மீது படியச் செய்தானும். இதனுற்றான் அவ்வளவு புகையாம். இது நழுவி விழும்போது தான் பக்கிரி பெருமூச்செறிந்து மாரைத்தட்டி ஆர்ப்பரித்து எல்லாரும் தன்னையே கவனிக்கும்படி செய்த தாம். கயிற்றை நன்றாக உயரக் கட்டிப் பின்பு பக்கிரி கயிறு எல்லாவற்றையும் புகை மறைவில் வீட்டின் மேல் மாடத்தில் இழுத்துக் கொண்டானும்.

நாமெல்லாம் உயரப் பார்த்துக் கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கையில் பக்கிரி கயிற்றை இடுப்பில் சுற்றிக் கொண்டு படிவழியாக இறங்கித் தெரு வழியே எங்களைப் பார்த்து ஓடி வந்துக் கொண்டிருந்தானும்.

இந்த வித்தையின் மர்மம் இவ்வளவு தான். இதன் உண்மையை நன்கு அறிவதற் பொருட்டுக் கல்குத்தாவில் ஒரு பக்கிரியை இந்த வித்தையைக் காட்டச் சொல்லி கவனித்தோம். அப்பொழுது மெல்லிய கயிற்றைத் தொங்கவிடுவதையும், அதற்குப் பிந்திய நிகழ்ச்சிகளையும் என் கண்ணாலேயே பார்த்தேன்.''

அதற்கு மேலும் சந்தேகம் உண்டோ?

நமது நியாயஸ்தலங்களும் சட்ட ஸபைகளும்.

Our Law Courts & Legislative Councils.

ஸ்ரீமான் N.ராஜகோபால சாரியார், B.A. B.L. எழுதியது.

இப்பரதக்கண்டத்தை அரசுபுரியும் ஆங்கிலேய துரைத்தனத்தார் இத்தேசத்தில் செய்திருக்கும் ஏற்பாடுகளுள் நியாயஸ்தல ஏற்பாடு ஒன்றாகும். அவ்வித நியாயஸ்தலங்களில் இந்தியாவில் பலவிதங்கள் உண்டு. இதற்கெல்லாம் மேலாக இங்கிலாந்தில் பிரிவி கௌன்ஸில் (Privy Council) என்று வழங்கும் இராஜநியாயஸ்தலம் ஒன்று உண்டு. இந்தியாவில் இருக்கும் நியாயஸ்தலங்கள் அநேக விதம், அவைகள் ஸிவில் (Civil) என்றும், கிரிமினல் (Criminal) என்றும் ரெவினியூ (Revenue) என்றும் வழங்கும். ஸிவில் நியாயஸ்தலங்களில் ஜனங்கள் ஒருவருக்கொருவர் சொத்தைப்பற்றிய வியவகாரங்களை விசாரிக்கிறார்கள். கிரிமினல் நியாயஸ்தலங்களில் ஜனங்கள் செய்யும் குற்றங்களை விசாரிக்கிறார்கள். ரெவினியூ நியாயஸ்தலங்களில் ஜமீந்தார்களுக்கும் அவர்களின் குடிகளுக்கும் உள்ள குத்தகைப் பணவிஷயம் முதலான வியவகாரங்களை விசாரிக்கிறார்கள். இம்மூன்று வகையிலும் நியாயஸ்தலங்களில் அஸல் (Original) நியாயஸ்தலமென்றும், அதற்குமேல் அப்பீல் (Appeal) நியாயஸ்தலமென்றும் படிப்படியாய் இரண்டு மூன்று வகைகளான நியாயஸ்தலங்கள் இருக்கின்றன. அஸல் நியாயஸ்தலங்களில் இருகக்ஷிக்காரர்களும் தங்கள் தங்களுடையக் கக்ஷிகளைச் சாக்ஷிகள் மூலமாகவும் தங்களுக்கு அநுகூலமான தஸ்தவேஜுகள் மூலமாகவும் ருஜுசெய்துகொள்ளவேண்டியது. அதன்பிறகு தான நியாயாதிபதி தீர்மானம் சொல்லுவது. அஸல் நியாஸ்தலத்தில் நியாயம் கிடைக்காவிட்டால் அப்பீல் நியாயஸ்தலத்தில் நியாயம் பெறலாம். இந்தியாவில் இவ்வ

.கையாய் ஏற்பட்டிருக்கும் நியாயஸ்தலங்களில் நியாயம் கிடைக்காவிட்டால் இங்கிலாந்தில் இருக்கும் பிரிவி கௌன்ஸில் என்று சொல்லப்படும் நியாயஸ்தலத்தில் ஜனங்கள் சில சில பெரிய வியவகாரங்களில் அப்பீல் செய்து நியாயம்பெறலாம். இவ்விதமான நியாயஸ்தலங்களை யெல்லாம் ஆங்கிலேயர் இந்த தேசத்தில் வந்து ஊன்றின சிலகாலமான வுடனேயே, அதாவது சுமார் 120 வருஷங்களுக்கு முன்னமேயே, ஏற்படுத்தி விட்டார்கள். ஆதியில் இந்துராஜாக்களின் நியாயஸ்தலங்களில் நியாயம் சற்றேறக்குறைய ஸரியாக நடந்ததென்றும் பிறகு மகம்மதிய துரைத்தனத்தார் நாட்களில் அவ்வளவு நியாயம் கிடைக்கவில்லை என்றும் நாம் கேள்விப்படுகிறோம். தேசத்திற்குத் தகுந்த நியாயஸ்தலங்களும் தகுந்த சட்டதிட்டங்களும் ஜனங்களுடைய ஸொத்தையும், தேகத்தையும், மானத்தையும் காப்பாற்றுவன. நியாயஸபைகள் ஏற்படுத்தின மாதிரியாகவே இன்னாட்டுக்குச் சட்டதிட்டங்கள் செய்ய ஆங்கிலே துரைத்தனத்தார் இந்தியாவிலும், இங்கிலாந்திலும் படிப்படியாக ஸபைகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இச்சட்டஸபைகளில் ஜனங்களுக்கு வேண்டியவைகளும், துரைத்தனம் நடக்கவேண்டியதற்கு அவசியமானதுகளுமான சட்டங்கள் துரைத்தனத்தாரும் ஜனங்கள் பிரதிநிதிகளும் கலந்து யோசித்துப் பிறகு ஏற்படுகின்றன. அப்படி ஏற்படுமுன் ஜனங்கள் சொல்லிக் கொள்ள இஷ்டப்படுகிற ஆக்ஷேபணைகளையெல்லாம் கேட்டுப் பிறகு சட்டஸபையார் சட்டங்களை ஏற்படுத்துகிறார்கள். இவ்விதமாகச் சட்டதிட்டங்கள் ஏற்படுத்தும் விஷயத்திலும் நியாயஸ்தலங்களில் நியாயம் செலுத்தும் விஷயத்திலும் துரைத்தனத்தார் நிஷ்பக்ஷபாதமாக நடக்கிறார்கள். ஏதேனும் சிலவிஷயங்களில் குற்றம் குறைவு ஏற்பட்டால் அவை இக்காரியங்களை நடவடிக்கைக்கு கொண்டு வரும் சில அதிகாரிகளுடைய புத்திக்குறைவினால் உண்டான தவறுதல்கள் என்று யோசிக்கவேண்டுமேயொழிய ஏற்படுத்தின ஏற்பாட்டின் குறைவு என்று எண்ண நியாயமில்லை என்பது என். கொள்கை.

அறிவுநூல் மொழிகள்

Scientific Terms.

மனோன்மணீயம் என்னும் நாடகமியற்றிய காலஞ் சென்ற பிரொபஸர் பி சுந்தரம் பிள்ளை அவர்கள் M. A., எழுதிய நூற்றொகை விளக்கம் என்னும் நூலின் அனுபந்தத்தினின்று கீழே காணும் மொழிகளை எடுத்திருக்கிறது.

Chemistry-	இரசாயனம்
Atom	மூல அணு
Chemical Union	ஐக்கியமுயக்கம்
[Experiment	கருவிப்பிரயோகம்]
Hydrogen	ஜலஜனகவாயு
Indivisible Particle	அவ்வியாகிருத அணு
Mechanical mixture	வெறுங்கலவை
Molecule	கலப்பணு, வியாகிருத அணு
Molecular motion	அணு இயக்கம்
Oxygen	அனலன்
Proportion	சரிமுறை இணை
Ratio	முறை
Physics	சத்திநூல்
Comet	தூமகேது
Dynamics(Motion caused by unequal forces)	அசாமியசாங்க இயக்கம்
Electricity	மின்மயம்
Equilibriu'n	சாமியசாங்க இயக்கம்
Gas	ஆவி (கால்)
Liquid	நெகிழ்ச்சி (நீர்)
Molar motion	சாங்க இயக்கம்
Motion	இயக்கம்
Solid	கடினம் (நிலம்)
Statics	சாமியசாங்க இயக்கம்

நமது நேசனைப் படிக்கும் நண்பர்கள் இம்மொழிகளை நன்கு ஆராய்ந்து அவற்றுள் யாவற்றையாயினும் தாம் ஒப்ப முடியாதென நினைப்பின் அவற்றிற்கு ஈடான மொழிகளை எனக்கு எழுதி அனுப்பும்படி தாழ்மையாய் வேண்டிக் கொள்ளுகிறேன்.

துணைக் காரியதரிசி,
தமிழர் கல்விச் சங்கம்.